# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 075/ந/2017

ஆணை எண். 199/2017

நாள் : 03/08/2017

11.04.2017 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி. – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

ஆணையர்,
தாம்பரம் நகராட்சி,
தாம்பரம். – எதிர்மனுதாரர்

"ஒப்பந்ததாரர்கள் கையில் சிக்கிய தாம்பரம் நகராட்சி" என்று தலைப்பிட்டு 11.04.2017 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப் பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை, 2014–ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7–ன் கீழ் முறையீடாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 75/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி செய்தி குறித்து தாம்பரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தாம்பரம் நகராட்சிக்கு சொந்தமான கட்டடம் ஒன்றில் ஒப்பந்ததாரர்கள் முறைகேடாக கடை அமைத்தது குறித்து "ஒப்பந்ததாரர்கள் கையில் சிக்கிய தாம்பரம் நகராட்சி" என்று தலைப்பிட்டு 11.04.2017 அன்று தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடபட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினைக் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. 05.06.2017 நாளிட்ட தனது அறிக்கையில், 2013–2014–ஆம் ஆண்டு தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35, சண்முகம் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் 30 கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்காக பொது ஏலம் விடப்பட்டது என்றும் அதிகம் ஒப்பந்தப் புள்ளி வழங்கிய நபர்களுக்கு நகராட்சிக்கு சொந்தமான மேற்படி 30 கடைகள் மாத வாடகைக்கு விடப்பட்டன என ஆணையர் தெரிவித்துள்ளார். ஆனால், மேற்கண்ட வணிக வளாகத்தில் 29 கடைகள் மட்டுமே உள்ள நிலையில், அவ்வணிக வளாகத்தின் படிகட்டிற்கு கீழே உள்ள காலி இடமும் கடையாக கருதி ஏலம் விடப்பட்டுள்ளது என்றும், படிகட்டிற்கு கீழ் உள்ள இடம் மின்சாதனங்கள் பொருத்தப்பட்ட பகுதியாக இருந்ததால் 30–வது கடையாக ஏலம் விடப்பட்ட

அப்பகுதி, நகர்மன்ற ஒப்புதல் பெற்று இரத்து செய்யப்பட்டு விட்டது எனவும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து நகராட்சி ஆணையர் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு, படிகட்டு கீழ் மின்சாதனங்கள் பொருத்தப்பட்ட இடத்தினை வணிகப் பயன்பாட்டிற்க வழங்கியதை இரத்து செய்துள்ள நிலையில் இந்நேர்வின் மீதான **நடவடிக்கையினை** இத்துடன் முடித்துவைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், **3**–ஆம் **நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு,** அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.**

3.8.17

4/8/17

பெறுநர்

**நகராட்சி ஆணையர்,**
**தாம்பரம் நகராட்சி.**
**தாம்பரம்.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்),
**பேரூராட்சி பிரிவு –3,**
இ.கோ. / உதிரிகள்